இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 13-06-2025

# ஊழலோடு கூட்டணி அமைத்த அமித்ஷா!

**அ.தி.மு.க.வுடன் சேர்ந்து ஆட்சி அமைக்கப் போகிறாராம் அமித்ஷா. இதனைச் சொல்வதற்கு அவருக்கு வெட்கமாக, அவமானமாக இல்லையா?**

**'மோடியா? லேடியா?' என்று கேட்டவர் ஜெயலலிதா. மறந்து போய்விட்டதா அமித்ஷா அவர்களுக்கு?**

2014 ஏப்ரல் 21 அன்று சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் ஜெயலலிதா பேசியது நினைவில் இருக்கிறதா பா.ஜ.க.வினருக்கு?

"ஒரு மாநிலம் வளர்ச்சி பெற்றிருக்கிறதா? அந்த வளர்ச்சி ஏழை, எளிய, நடுத்தர மக்களை சென்றடைந்து இருக்கிறதா? ஒடுக்கப்பட்ட மக்கள் வளர்ச்சி அடைந்திருக்கிறார்களா என்பதை தெளிவுபடுத்தும் கண்ணாடியாக விளங்குபவை மனிதவளக் குறியீடுகள். விளம்பர வளர்ச்சி எது என்பதையும், உண்மையான வளர்ச்சி எது என்பதையும் இந்த மனிதவளக் குறியீடுகள் தெளிவுபடுத்தும்.

★ **குஜராத்தில் 16.6 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர். ஆனால் தமிழகத்தில் 11.3 சதவிகித மக்கள் தான் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர்.**

★ **உயிருடன் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் ஒரு வயதை அடைவதற்குள் 38 குழந்தைகள் குஜராத்தில் இறந்து விடுகின்றன. ஆனால் தமிழகத்தில் ஒரு வயதை அடைவதற்குள் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 21 மட்டுமே.**

★ **ஒரு லட்சம் குழந்தை பிறப்பில் தாய் இறப்பு விகிதம் குஜராத்தில் 122. தமிழகத்தில் இது 90 தான்.**

★ **2012-13 ஆம் ஆண்டு குஜராத்தில் பெறப்பட்ட அன்னிய முதலீடு வெறும் 2,676 கோடி ரூபாய். ஆனால், தமிழ்நாட்டில் பெறப்பட்டதோ 15,252 கோடி ரூபாய்.**

★ **கடந்த பத்து ஆண்டுகளில் குஜராத்தில் மகளிருக்கு எதிரான குற்றங்கள் 65 சதவிகிதம் அதிகரித்துள்ளன. தமிழ்நாட்டில் மகளிருக்கு எதிரான குற்றங்கள் 29 சதவிகிதம் குறைந்துள்ளது.**

★ **பொது விநியோகத் திட்டத்திலிருந்து உணவுப் பொருள்களை கள்ளச் சந்தையில் விற்பது குஜராத்தில் 63 சதவிகிதம் ஆகும். இது தமிழ்நாட்டில் 4 சதவிகிதம்தான்.**

வாக்காளர்களே இப்போது சொல்லுங்கள்... சிறந்த நிர்வாகி யார்? குஜராத்தைச் சேர்ந்த மோடியா அல்லது தமிழகத்தைச் சேர்ந்த இந்த லேடியா?" என்று கேட்டார் ஜெயலலிதா. மோடியை விடத் தனது ஆட்சி தான் சிறந்த ஆட்சி என்று சொன்னவர் மட்டுமல்ல; மோடியை அம்பலப் படுத்தி தமிழ்நாட்டு அரசியல் களத்தில் அதிகம் பேசியவரும் ஜெயலலிதா தான்.

ஜெயலலிதா ஆட்சியை ஊழல் ஆட்சி என்று சொன்னவர்கள் தான் பிரதமர் மோடியும், அமைச்சர் அமித்ஷாவும்.

2016 சட்டமன்றத் தேர்தலின் போது ஜெயலலிதாவுக்கு எதிராகத் தான் பிரதமர் மோடி பேசினார். **"பா.ஜ.க.வுக்கு அனைவரும் வாக்களியுங்கள். ஒவ்வொரு முறையும் அம்மாவிடம் (ஜெயலலிதா) கோபித்துக் கொண்டு அய்யாவுக்கு (கலைஞர்) வாக்களிப்பீர்கள். அல்லது அய்யாவிடம் கோபித்துக் கொண்டு அம்மாவுக்கு வாக்களிப்பீர்கள். மாற்று சக்தி இல்லை. ஒரு முறை கிணற்றில் விழுந்தால் அடுத்த முறை ஏரியில் விழுவீர்கள். இப்போது பா.ஜ.க. என்ற மாற்று சக்தி உங்களுக்கு கிடைத்து விட்டது. இப்போதைய ஆட்சியில் (அ.தி.மு.க.) லஞ்ச லாவண்யம் தலை விரித்தாடுகிறது. தமிழ்நாடே இதனால் பாதிக்கப்பட்டு விட்டது. லஞ்சம் வாங்குபவர்கள் (ஜெயலலிதா) கையில் ஆட்சி இருக்கிறது"** என்று பேசினார் அன்றைய மோடி. இப்போது அ.தி.மு.க. என்ற கிணற்றில் அவர்களே போய் விழுந்திருக்கிறார்கள். ஊழலோடு கைகோர்த்திருக்கிறார்கள் மோடியும் அமித்ஷாவும்.

2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக இங்கே பரப்புரை செய்ய வந்த அமித்ஷா, 'அ.தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும்' என்று பேசினார். திருச்சியில் பேசிய அமித்ஷா, ஜெயலலிதாவை கடுமையாகத் தாக்கிப் பேசினார். "இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த அரசாங்கம் ஜெயலலிதாவின் அரசாங்கம்தான்" என்றார். "மே 16 ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சியை அகற்றுங்கள் என்று மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று பேசினார். இப்போது ஊழலோடு கூட்டணி வைத்துள்ளார் அமித்ஷா.

"அ.தி.மு.க. அரசு, தமிழகத்துக்கு மத்திய அரசு அறிவித்த பல்வேறு திட்டங்களை நிராகரித்தும், செயல்படுத்தாமலும் கிடப்பில் போட்டுள்ளது. இதனால், தமிழகம் வளர்ச்சி காணாமல் ஊழல் மலிந்து காணப்படுகிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும்" என்று பட்டுக்கோட்டையில் பேசினார் அமித்ஷா. "இந்தியாவின் மிகவும் ஊழல் நிறைந்த ஜெயலலிதாவின் அரசாங்கத்தை மக்கள் மாற்றி, பா.ஜ.க.வுக்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும்" என்று தான் போகும் இடமெல்லாம் பேசினார். இன்று ஊழலோடு கூட்டணி அமைத்துள்ளார் அமித்ஷா.

பழனிசாமி ஆண்ட போதும், 'நாட்டிலேயே ஊழல் மிகுந்த ஆட்சி, தமிழ்நாட்டில்தான் நடக்கிறது' என்று பேசியவர் அமித்ஷா. 09.07.2018 – அன்று திருச்சியில் அளித்த பேட்டியில், **"அ.தி.மு.க. தலைவர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ளன. அவை அரசியல் வழக்குகள் அல்ல, ஊழல் வழக்குகள். இவர்கள் ஆட்சிக்கு வரும் போதெல்லாம் ஊழல் செய்துள்ளனர். சொத்துக் குவிப்பு வழக்கு இருக்கிறது. இந்த ஊழல் காரணமாக தமிழ்நாடு வளர்ச்சி அடையவில்லை. அ.தி.மு.க. அரசின் ஒத்துழைப்பு இல்லாததால் மத்திய அரசின் திட்டங்கள் தமிழக மக்களைச் சென்று சேரவில்லை. எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதில் கூட தமிழ்நாடு அரசு காலதாமதம் செய்கிறது"** என்று சொன்னார். இதே பழனிசாமி வீட்டில் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார் அமித்ஷா. அவமானமாக இல்லையா?



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) திருப்பூர் மாவட்டம், செங்கப்பள்ளியில் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினரும், திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான செல்வராஜ் அவர்களின் மகள் செந்தமிழ் – யோகேஷ் கண்ணா ஆகியோரது திருமண வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி, பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, திருப்பூர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தினேஷ்குமார், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.06.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு மாநில அளவிலான மணிமேகலை விருதுகள் வழங்கும் விழாவில், 35 சமுதாய அமைப்புகளைச் சேர்ந்த மகளிருக்கு மாநில அளவிலான மணிமேகலை விருதுகளையும் மொத்தம் ரூ.59.00 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கினார். இந்நிகழ்வின்போது, இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறைஅமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதிஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங்பேடி, தமிழ்நாடு மகளிர்மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் திருமதி.K.விஜயலட்சுமி, திருமதி.S,சரண்யா, மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.3,134.21 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்குவதை துவக்கி வைத்தார்!

# 35 சமுதாய அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி 'மதி' இலட்சினையை வெளியிட்டார்!

**சென்னை, ஜீன் 13-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 33,312 சுய உதவிக் குழுக்களுக்கு 3,134.21 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்குவதை துவக்கி வைக்கும் வகையில், சென்னையைச் சேர்ந்த 1,401 சுய உதவிக் குழுக்களுக்கு 123.65 கோடி ரூபாய்க்கான வங்கிக் கடன் இணைப்புகளையும், 35 சமுதாய அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள் மற்றும் மொத்தம் 59.00 லட்சம் ரூபாய்க்கான விருது காசோலைகளையும் வழங்கி, புதிதாக வடிவமைக்கப்பட்ட "மதி இலட்சினையை" (Logo) வெளியிட்டார்.**




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.06.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு மாநில அளவிலான மணிமேகலை விருதுகள் வழங்கும் விழாவில், சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புப் பொருட்களுக்காக புதியதாக வடிவமைக்கப்பட்ட "மதி இலட்சினையை" (Logo) வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறைஅமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங்பேடி, தமிழ்நாடு மகளிர்மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் அரசு உயர்அலுவலர்கள் உடனிருந்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாநில அளவிலான மணிமேகலை விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ்நாடு முழுவதும் 33,312 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 3,76,443 உறுப்பினர்களுக்கு 3,134.21 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்குவதை துவக்கி வைக்கும் வகையில், சென்னையில் செயல்படும் 1,401 சுய உதவிக் குழுக்களின் 14,083 உறுப்பினர்களுக்கு 123.65 கோடி ரூபாய்க்கான வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் செயல்பட்டு வரும் 20 சுய உதவிக் குழுக்களுக்கு விருது மற்றும் தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள், 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருது மற்றும் தலா 3 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள், 5 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு கூட்டமைப்புகளுக்கு விருது மற்றும் தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள், 3 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருது மற்றும் தலா 3 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள், திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த ரெட்டியார் சத்திரம் வட்டார அளவிலான கூட்டமைப்பு மற்றும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சேலம் மேற்கு சூரமங்கலம் நகர அளவிலான கூட்டமைப்பிற்கு விருது மற்றும் தலா ரூ.5.00 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள் என மொத்தம் 35 சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு 2024-2025 ஆம் ஆண்டுக்கான மணிமேகலை விருதுகள் மற்றும் விருதுத் தொகையாக மொத்தம் 59.00 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, 9.4.2025 அன்று சென்னை, நேரு பூங்காவில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் நடைபெற்ற மாநில அளவிலான முதல் பன்முகக் கலாச்சாரப் போட்டிகளில் வெற்றி பெற்ற 20 சுய உதவிக் குழுக்களுக்கு விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் பரிசுத் தொகையாக மொத்தம் ரூ.2.75 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

இவ்விழாவில், சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களுக்காக புதியதாக வடிவமைக்கப்பட்ட "மதி இலட்சினையை" (Logo) வெளியிட்டு, சுய உதவிக் குழுக்களால் தரமான முறையில் தயாரிக்கப்பட்ட 'செக்கு கடலை எண்ணெய்யை' பொது மக்களின் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தினார்.

முன்னதாக, இவ்விழாவினையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில், காட்சிப்படுத்தப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களைப் பார்வையிட்ட தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், சுய உதவிக்குழுவினருடன் கலந்துரையாடினார்.

இவ்விழாவில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் திருமதி.K.விஜயலட்சுமி, திருமதி. S,சரண்யா மற்றும் அரசு உயர் அலுவலர்கள், சுய உதவிக்குழு மகளிர் கலந்து கொண்டனர்.